# என் எல்சி இந்தியா லிமிடெட்

(முன்னாள் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்)

நவரத்னா - இந்திய அரசு நிறுவனம்

பதிவு அலுவலகம் : முதல் தளம், எண்.8, மேயர் சத்யமூர்த்தி சாலை,
இந்திய உணவு கழகத்தின் எழும்பூர் வளாகம், சேத்துப்பட்டு, சென்னை - 600 031
தலைமை அலுவலகம் : வட்டம் - 1, நெய்வேலி - 607 801, கடலூர் மாவட்டம், தமிழ்நாடு

CREATING WEALTH FOR WELL BEING

**CIN No.: L93090TN1956GOI003507,** Website: www.nlcindia.com

# அறிவிப்பு

நவரத்னா என்ற சிறப்புத்தகுதி பெற்ற என்எல்சி இந்தியா நிறுவனத்தில், வேலை வாய்ப்புகள் ஏற்படும்போது அவை அரசின் விதிமுறை மற்றும் நடைமுறைகளின் அடிப்படையில், முறைப்படி அறிவிப்பு அல்லது விளம்பரம் செய்யப்பட்டு, தகுதியான நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்நிலையில், இந்நிறுவனத்தில் நேர்முகத்தேர்விற்கு வரும்படியாக போலியான அழைப்புகள் பல்வேறு நபர்களுக்கு சில நபர்களால் அனுப்பப்பட்டுள்ளன என்று என்எல்சி இந்தியா நிறுவனத்திற்குத் தெரியவந்துள்ளது. எனவே, பொதுமக்கள் அனைவரும் இதுபோன்ற போலியான நேர்முகத் தேர்வுக்குரிய அழைப்பு மற்றும் பணியில் சேர்வதற்கான ஆணைகளை நம்பி ஏமாற வேண்டாம் என என்எல்சி இந்தியா நிறுவனம் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுகிறது. மேலும், இதுபோன்ற ஏமாற்று வேலைகளை செய்பவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கிறது. அனைத்து காலி பணியிடங்கள் / நியமனங்கள் பற்றிய தகவல்கள் எங்களது **www.nlcindia.com** இணையதளத்தில் வெளியிடப்படும். மோசடி நபர்களிடம் ஏமார்ந்துபோவதைத் தவிர்க்க, இணையதளத்தை மட்டுமே பார்த்து அதற்கேற்ப செயல்படும்படி பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பொய்யான மற்றும் ஏமாற்றும் தகவல்கள் அளிக்கும் நபர்களிடம் நம்பிக்கை வைத்து செயல்படும் விண்ணப்பதாரர்களுக்கு ஏற்படும் எந்த ஒரு இழப்பிற்கும் என்எல்சி இந்தியா நிறுவனம் பொறுப்பேற்காது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**என்எல்சி இந்தியா நிறுவனம்**

**பொதுத்துறை நமது உடமை : அதன் சேவை சிறக்க உதவிடுவோம்**